# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2015

| தரம் : 06 | நாடகமும் அரங்கியலும்<br>பெயர் / சுட்டெண் : ................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

எல்லா வினாக்களுக்கும் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.

01. நாடகம் போலச் செய்தலின் அடியாகத் தோன்றியது எனக் கூறியவர்
 1) பரதர் 2) அரிஸ்ரோட்டில்
 3) தொம்சன் 4) பீற்றர் புறூக்

02. கூத்தினைப் பழக்குபவர்
 1) அண்ணாவியார் 2) நெறியாளர்
 3) நாடகாசிரியர் 4) நடிகர்

03. குழந்தை ம. சண்முகலிங்கத்தின் சிறுவர் நாடகம்
 1) கூடி விளையாடு பாப்பா 2) பல்லி
 3) தேவலோக யானை 4) மூடக்கிழவன்

04. நாடகத்தின் பிரதான மூலகம்
 1) நடிகர் 2) இசை
 3) காண்பியம் 4) கைப் பொருட்கள்

05. அபிநயங்கள் எத்தனை வகைப்படும்
 1) 5 2) 4
 3) 7 4) 8

06. கிராமிய விளையாட்டு அல்லாதது
 1) கிட்டிப்புள் 2) தாச்சி
 3) துடுப்பாட்டம் 4) ஒப்பு

07. நாட்டார் கதைகளின் மொழிப் பிரயோகம்
 1) செந்தமிழ் பாங்கானது 2) இலகுவானது
 3) எளிமையானது 4) கிராமியப் பாங்கானது

08. ஆற்றுகைக் கலை வடிவம் அல்லாதது
 1) இசை 2) நடனம்
 3) நாடகம் 4) ஓவியம்

09. சிறுவர் நாடகங்களில் ஒன்று
 1) பந்தயக் குதிரையார் 2) மண் சுமந்த மேனியர்
 3) பொருளோ பொருள் 4) உறவுகள்



kalvi.lk

10. பஞ்சவர்ண நரியார் நாடக ஆசிரியர்
   1) வேலு சரவணன்  2) குழந்தை ம. சண்முகலிங்கம்
   3) க.கணபதிப்பிள்ளை  4) சிவசேகரம்

11. வகுப்பறையில் இருந்தவாறே விளையாடக் கூடிய அரங்க விளையாட்டு
   1) சின்னப்பானை பெரியபானை  2) ஆடும் வீடும்
   3) கோழி கோட்டான்  4) காகம் உயிர் பெறுதல்

12. முன்னாயத்தம் இன்றி செய்யப்படுவது
   1) புதிதளித்தல்  2) போலச் செய்தல்
   3) செய்து காட்டுதல்  4) தயார் நிலையில் செய்தல்

13. சமூகத்தில் அவதானிக்கக் கூடிய பாத்திரம்
   1) அரசன்  2) தேவர்
   3) தேவதை  4) மீன்வியாபாரி

14. அங்க அசைவுடன் தொடர்புடைய அபிநயம்
   1) ஆங்கீகம்  2) சாத்வீகம்
   3) ஆஹார்யம்  3) வார்ச்சீகம்

15. உலக நாடக தினம் கொண்டாடப்படுவது
   1) பங்குனி 27  2) சித்திரை 27
   3) ஆனி 12  4) ஆவணி 22

16. சமூகத்தில் அவதானிக்கக் சுடிய இயற்கை ஒலி
   1) வாகனச் சத்தம்  2) கோயில் மணி ஓசை
   3) குருவியின் சத்தம்  4) வெடிகுண்டு சத்தம்

17. மரபுவழி நாடகத்தினைப் பழக்குபவர்
   1) அண்ணாவியார்  2) நெறியாளர்
   3) நடிகர்  4) பக்கப்பாட்டுகாரர்

18. வேட முகம் உருவாக்கத்திற்கு பயன்படும் பொருள் அல்லாதது
   1) களிமண்  2) கடதாசி
   3) பலூண்  4) கல்

19 ஆற்றுகைக் கலைகளில் ஒன்று
   1) நாடகம்  2) ஓவியம்
   3) சிற்பம்  4) ஓட்டுவேலை

20. கைப் பொருளாக அமைவது
   1) வாள்  2) மேசை
   3) மரம்  4) கதிரை

(20 x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட, 4 வினாக்களுக்கு விடை தருக.**

01\. 1) நீர் வகுப்பறையில் மேற்கொண்ட கணிப்பீட்டு செயன்முறை யாது?

2) கணிப்பீட்டுச் செயற்பாடு தொடர்பான அனுபவத்தினைக் குறிப்பிடுக?

3) கணிப்பீடு தொடர்பாக ஆசிரியர் கூறிய அறிவுரை யாது?

(15 புள்ளிகள்)

02\. 1) சிறுவர் நாடகம் என்றால் என்ன?

2) சிறுவர் நாடக ஆசிரியர்கள் இருவர் பெயர் தருக?

3) உமக்குத் தெரிந்த சிறுவர் நாடகப் பாடல் ஒன்றினை எழுதுக?

(15 புள்ளிகள்)

03\. 1) உமது சூழலில் அவதானித்த பாத்திரங்கள் 5 தருக?

2) சூழலில் அவதானிக்கக் கூடிய இயற்கை ஒலிகள் சில குறிப்பிடுக?

3) சூழலில் அவதானித்த காட்சி ஒன்றினை வரைந்து காட்டுக?

(15 புள்ளிகள்)

04\. 1) நாட்டார் கதை என்றால் என்ன?

2) நாட்டார் கதையின் மொழிப் பிரயோகம் எவ்வாறு அமைந்து காணப்படும்?

3) உமக்கு தெரிந்த நாட்டார் கதையினைக் குறிப்பிடுக?

(15 புள்ளிகள்)

05\. 1) போலச் செய்யக் கூடியன 5 தருக.

2) அரசன் பாத்திரம் ஒன்றை எவ்வாறு செய்து காட்டுவீர்.

3 கிழவன் பாத்திரமொன்றை போலச் செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் யாவை?

(15 புள்ளிகள்)

06\. 1) உமது சூழலில் அவதானித்த நிகழ்வு ஒன்றினைக் குறிப்பிடுக?

2) அந்நிகழ்வினை சுருக்கமாக எழுதுக?

3) அந் நிகழ்வில் காணப்படும் நாடக அம்சங்களினைக் குறிப்பிடுக?

( 15 புள்ளிகள்)



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන
kalvi.lk

# ONLINE CLASSES

## TAMIL AND ENGLISH MEDIUMS

அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்....

**GRADE 6**

திறமை வாய்ந்த ஆசிரியர்களினூடான சிறந்த வழிகாட்டலுடன் கூடிய வினைத்திறன் மிக்க நிகழ்நிலை வகுப்புகள்.

**FREE ADMISSION**

**075 287 1457**

| | | |
|---|---|---|
| தமிழ் | வரலாறு | சுகாதாரம் |
| விஞ்ஞானம் | English | புவியியல் |
| கணிதம் | ICT | குடியியல் |

- **Spoken English Classes.**
- **Sinhala Reading and Writing Classes.**
- **Map Marking Classes**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.
(தனிப்பாட அனுமதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்)



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்தவொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page